REGD. No. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆடி 24உ வியாழன் (8—8—57) ★ ★ வெளியூர்: ஆடி 25உ வெள்ளி (9—8—57) [இதழ் 46

மாஸ்கோ வர மகாரியஸ் பாதிரியாருக்கு அழைப்பு

லண்டன், ஆக. 6—

சைப்ரஸ் விடுதலைப் போராட்டத் தலைவரான மகாரியஸ் பாதிரியார் மாஸ்கோ வருமாறு அழைக்கப்பட்டிருக்கிறார் என்று மாஸ்கோ வானொலி அறிவிப்பு மூலம் தெரியவருகிறதாம்!

குருடிட்ஸ்கி சிரேஷ்ட குரு, இந்த அழைப்பை விடுத்திருக்கிறாராம். நவம்பர்—டிசம்பரில் நடைபெறும் ஒரு மதத் திருவிழாவில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறதாம்!

அடக்குமுறை அம்பு கிளம்பி விட்டது!

வேலை நிறுத்தத்தைத் தடை செய்கிறது டெல்லி!

பலதுறை சர்க்கார் ஊழியர்களின் உரிமைக்கு உலை

புதுடில்லி, ஆக. 7—

அத்தியாவசிய சர்விசுகள் பாதுகாப்புச் சட்டப்படி டெல்லி சர்க்கார், குடியரசுத் தலைவரின் அவசரப் பிரகடனத்தின் மூலம் தபால்-தந்தி, டெலிபோன், மற்றும் மத்திய சர்க்கார் இலாகா ஊழியர்களின் வேலைநிறுத்தத்தைச் சட்டவிரோதமானது என்று பறைசாற்றி, தடை விதித்திருக்கிறார்கள்.

இதுமட்டுமன்றி, தடையுத்தரவு பிறப்பித்த நேரத்திலேயே குடியரசுத் தலைவர், சர்க்கார் ஊழியர் நடத்தை விதிகளையும் திருத்தி உத்தரவு ஒன்று பிறப்பித்திருக்கிறார். இதன்படி, தங்கள் சம்பள உயர்வு போன்ற கோரிக்கைகளுக்காக எந்த சர்க்கார் ஊழியரும், வேலைநிறுத்தம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது.

இந்தத் தடைச் சட்டம் இப்போது ஆறு மாத காலத்திற்கு அமுல் செய்யப்படும் என்றும், பின்னர் அவசியம் என்று கருதினால் இந்தத் தடைச் சட்டத்தையே சர்க்கார் நீடிக்கும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

சட்டம் பிறப்பிக்கப்பட்டபின் எந்த ஊழியரும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடக்கூடாது என்றும், ஈடுபட்டால் அது சட்டவிரோதமானது என்றும், அதற்குத் தண்டனை தரப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பவர்களை மட்டுமின்றி, ஈடுபடுமாறு தூண்டுபவர்களையும், ஈடுபடுகிறவர்களுக்கு உதவுகிறவர்களையும் தண்டிக்கவும் சட்டம் இடம் கொண்டுள்ளது.

இந்தத் தடைச் சட்டம், தபால்-தந்தி, டெலிபோன் இலாகா, இரயில்வே, மற்றும் நில-நீர்-ஆகாய, வழிப் போக்குவரத்துத் துறைகள், விமானக் கூடங்களைப் பராமரிப்பவர்கள், துறைமுகங்களில் ஏற்றுமதி-இறக்குமதி வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்கள், தற்காப்பு இலாகாவைச் சேர்ந்த எல்லாப் பிரிவினர், இரகசிய அச்சுக்கூடம், நாணயச்சாலை இவற்றில் வேலை பார்ப்பவர்கள், மற்றும் சர்க்கார் எவற்றை எல்லாம் பொதுநல உபயோகத் துறை என்று கருதுகிறதோ அந்தத் துறைகள் அனைத்திலும் பணியாற்றுகிறவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதைத் தடை செய்கிறது.

'வேலை நிறுத்த விளைவுகளுக்கு சர்க்காரே பொறுப்பு'

தபால் ஊழியர் சங்கத் தலைவர் நிலைமையைத் தெளிவாக்குகிறார்

"சர்க்கார் எங்களுக்கு இடைக்கால நிவாரணம் தருவதாக உறுதிமொழி தந்தால், அறிவித்தால் அன்றி, நாங்கள் வேலை நிறுத்த முடிவைக் கைவிடுவதற்கில்லை"

என்று, தபால் ஊழியர் தலைவர் தால்வி தெரிவித்திருக்கிறார்.

"இடைக்கால நிவாரணம் அளிப்பதாக அறிவித்து 'வேலை நிறுத்தத்தைத் தவிர்க்கவேண்டும் என பண்டித நேருவை நான் கேட்டுக்கொள்கிறேன்; இடைக்கால நிவாரணம் அளிப்பது மிக அவசியமானதாகும்"

என்றும் தால்வி குறிப்பிட்டிருக்கிறார்.

"இப்போது, இந்த நிவாரணம் தரப் பணம் இல்லை என்று சர்க்கார் கூறுமானால், பின்னால் கமிஷன் சிபாரிசு செய்தால் மட்டும் பணம் எங்கிருந்து வந்துவிடும்? அப்போதும் பணம் இல்லை என்ற இந்தப் பல்லவியை சர்க்கார் பாடமாட்டார்கள் என்பதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது? எனவே, வெறும் உதட்டளவு அனுதாபம் எங்களை திருப்திப் படுத்தாது"

என்றும் தால்வி கூறியிருக்கிறார்.

"நேரு தருகிற எவ்வளவு பெரிய உறுதிமொழிகளையும், உருவான பலன் கிடைத்தாலன்றி ஊழியர்கள் நம்புவதற்குத் தயாராக இல்லை"

என்றும் தால்வி நேற்று பம்பாயில் கூறியிருக்கிறார்.

"மேலும், நாங்கள் எங்கள் முடிவைத் தெளிவாக்கிவிட்டோம்; எனவே, வேலை நிறுத்தம் ஏற்படுவதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல. வேலை நிறுத்தத்திற்கும், அதன் விளைவுகளுக்கும் சர்க்காரே முழுப் பொறுப்பானவர்கள்"

என்றும் தால்வி கூறிவிட்டார்.

"வேலை நிறுத்தத்தைக் கைவிட வேண்டும் என்று கேட்கிறீர்களே, எப்படிக் கைவிடுவது? இரண்டு ஆண்டுகளாக நாங்கள் எழுப்பிவரும் கோரிக்கைகளுக்கு சர்க்கார் தந்த மதிப்பு என்ன? தலைவர் பெயர் மட்டும் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு 'சிறு' சம்பளக் கமிஷன், அதன் அதிகாரங்களும் வரம்புகளும் மிகக் குறுகியவை; எங்களுக்குத் திருப்தி தராதவை! மேலும் ஒரு கருப்புச் சட்டம்!

"இவற்றைப் பெற்றிருப்பதற்காகவா நாங்கள் வேலை நிறுத்த முடிவைக் கைவிடவேண்டும் என்கிறீர்கள்?"

என்றும் தால்வி கேட்டிருக்கிறார்.

ஆட்சியினரின் தயக்கம் விளைவிக்கும் கொடுமை!

தொழிலாளர் பாதுகாப்புச் சட்டத்திலிருந்து தப்பித்துவிட முதலாளிகள் முயற்சி?

சென்னை, ஆக. 7—

சிற்றுண்டி விடுதிகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று முற்போக்குக்கட்சிகள் பல ஆண்டுகளாக வற்புறுத்தியும்கூட, அரசாங்கம் கடைப்பிடித்துவந்த தயக்கத்தின் காரணமாக, எதிர்பார்த்த பயன் தொழிலாளருக்கு ஏற்படாத நிலை உருவாகியுள்ளது.

சிற்றுண்டிச் சாலைகளில் உள்ள தொழிலாளர்களுக்குப்பாதுகாப்பு அளிக்க சென்னை அரசாங்கம் சட்டம் கொண்டுவரும் என்று தொழில் அமைச்சர் சட்டசபையில் அறிவித்த பின்னர் பெரிய சிற்றுண்டிச் சாலைகளின் முதலாளிகள் மூடுவிழா நடத்த முற்பட்டுவிட்டனர் என்று கூறப்படுகிறது.

சென்னையில் உள்ள 'ஆரிய பவன்', 'பீம விலாஸ்', 'வைகுண்ட விலாஸ்', 'வெல்கம் ஓட்டல்' முதலியவை மூடப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது!

இந்தியா — பாகிஸ்தான் கால்வாய்த் தகராறு

தீர்க்கப்பட்டுவிடக்கூடும்

புதுடில்லி, ஆக 8—

இந்தியாவுக்கும் — பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள கால்வாய் பற்றிய தகராறு தீர்க்கப்படலாம் என்று தெரிய வருகிறது.

1954-ல் உலக பாங்கி கூறிய யோசனைகளை பாகிஸ்தான் ஏற்கக்கூடும் என்று தெரிய வருகிறது.

மூன்று மேற்கு நதிகளின் தண்ணீரை பாகிஸ்தானும், கிழக்கு நதிகளின் தண்ணீர் முழுவதையும் இந்தியாவும் பகிர்ந்து கொள்ளும்.

தொடர்பு கால்வாய் வெட்டவும், தண்ணீர் தேக்க அணை கட்டவும் இந்தியா அதற்குரிய செலவுத் தொகையைத் தர வேண்டும்.

உலக பாங்கியின் ஆதரவில் இரு நாடுகளின் அமைச்சர்களும் கலந்துபேசி மேற்கொண்டு ஆவன செய்வார்கள் என்று தெரிய வருகிறது.

நாள்தோறும் 3 கோடி காலன் தண்ணீர்

சென்னை நகரில் செலவழிகிறது

சென்னை, ஆக. 7—

சென்னை நகரத்திற்கு நாள்தோறும் 3 கோடி காலன் தண்ணீர் விநியோகத்திற்கு விடப்படுகிறதாம்!

ரஷ்யா ஆண்டுதோறும் சுமார் 1,20,00,000 கச்சா ஆட்டுத் தோல்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து வருகிறதாம்!

கழகப் படிப்பகத்தில் புகுந்து தாக்கிய கம்யூனிஸ்டுகள்

இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை பெற்றனர்

மதுரை, ஆக. 8—

தி. மு. கழகப் படிப்பகத்திற்குள் நுழைந்து, படிப்பகத்திற்குச் சேதம் விளைவித்ததுடன், அங்கிருந்தவர்களையும் அரிவாளால் தாக்கிக் காயப்படுத்தியது சம்பந்தமாக போலீசார் தொடுத்த வழக்கில், கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த சின்னத்தேவர், குட்டராசு என்னும் நல்லபெருமாள் ஆகிய இருவருக்கும் தலைக்கு இரண்டாண்டு சிறைத்தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது.

குற்றஞ்சாட்டப்பட்ட சின்னத்தேவர், குட்டராசுஎன்னும் நல்லபெருமாள், கருவாயன் என்னும் அய்யாவு ஆகிய மூவரும் கடந்த 27—5—57 அன்று, கையில் ஆயுதங்களுடன் சென்று, செல்லூரில் உள்ள தி. மு. கழகப் படிப்பகத்தைச் சேதப்படுத்தினார்கள் என்றும் அங்கிருந்த மணி முதலிய ஏழுபேரை அரிவாளால் வெட்டிக் காயப்படுத்தினர் என்றும் தேர்தலின்போது கம்யூனிஸ்டுக் கட்சிக்கும், தி. மு. கழகத்துக்கும் ஏற்பட்ட பகை காரணமாகவே இவர்கள் இக்கொடிய செயலில் ஈடுபட்டிருப்பதாகவும் போலீசார் தரப்பில் கூறப்பட்டது.

எதிரிகள், படிப்பகத்திலிருந்த அனைவருக்கும் சாதாரண — பலத்த காயங்கள் உண்டாக்கியதுடன் படிப்பகத்துக்கும் சேதம் விளைவித்தனர் என்று போலீசார் கூறினர்.

முதல் இரு எதிரிகளும் குற்றவாளிகளே என நீதிபதி தீர்ப்பு அளித்து, இ.பி.கோ. 324 பிரிவின்கீழ் 9 மாதச் சிறையும், 326 பிரிவின்கீழ் 2 ஆண்டுச் சிறையும், 426 பிரிவின்படி 3 மாதச் சிறையும் விதித்து தண்டனை அனைத்தையும் ஒரே காலத்தில் அனுபவிக்க வேண்டுமென உத்தரவிட்டார். மூன்றாவது எதிரி அய்யாவு விடுதலை செய்யப்பட்டார்.

புதுடில்லியிலுள்ள அசோகா ஓட்டலுக்காக 1957 ஜூன் 30-ந் தேதிவரையில் மொத்தம் ரூ. 2,38,00,000 செலவாகியிருக்கிறதாம்!

அண்ணா டெல்லி செல்வார்

வரவேற்பளிக்க தமிழர்கள் முடிவு

டெல்லியிலுள்ள தமிழர்கள் 21—7—57-ல், 'வள்ளுவர் மன்றம்' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

அமைப்பு விழாக் கூட்டத்திற்கு திரு. செங்குட்டுவன் தலைமை வகித்தார்.

தி. மு. கழகப் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ. வெ. கி. சம்பத், தருமலிங்கம் ஆகியோரும் தோழர்கள் பிரபாகரன், வெங்கடசாமி முதலியவர்களும் டில்லியிலுள்ள தமிழர்களுக்கு இத்தகைய இலக்கிய—கலாச்சார அமைப்பு இருக்க வேண்டியதின் அவசியத்தை எடுத்துரைத்தனர்.

வள்ளுவர் எழுதிய 'திருக்குறள்' பற்றி அந்தப் பகுதி மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டியதின் முக்கிய நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு மன்றம் நிறுவப்பட்டுள்ளது.

மன்றத்திற்குத் தனி இடம் ஏற்பாடு செய்யவும், தென்னகத்தின் சிறந்த ஏடுகளை தருவித்து மக்களிடையே பரப்பவும், அண்ணா அவர்கள் டில்லிக்கு வரும்போது வரவேற்பு அளிக்கவும், பெரியதோர் பொதுக் கூட்டம் நடத்தவும் குழு அமைக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

ஸ்தல ஸ்தாபன சீர்திருத்தம்

சென்னை, ஆக. 7—

ஸ்தல ஸ்தாபன சீர்திருத்தம் பற்றிய வெள்ளை அறிக்கை சென்னை சட்டசபையில் அக்டோபரில் வெளியிடப்படுமாம். அதற்கான சட்டம் தயாராகி வருகிறதாம்.

நம் நாடு

சென்னை 8—8—57 வியாழன்

வீழ்க, கருப்புச் சட்டம்!

டெல்லிப் பெரியவர்கள் வெள்ளை ஏகாதிபத்தியவாதிகளை மிஞ்சிவிட்டனர். மக்களின் ஜனநாயக உரிமைகளை, கொஞ்சம் கொஞ்சமாக, தட்டிப் பறித்து வருகின்றனர். கொடிய அநீதிகளையும், பெயர் பெற்ற அக்கிரமங்களையும், அலாதியான துணிச்சலோடு செய்துவருகின்றனர். தெளிவான நியாயங்களுக்கு புதைகுழி தோண்டுவதும், அநியாயங்களுக்குப் பூசை போடுவதும் நித்திய வழக்கமாகிவிட்டது, அவர்கள் ஆட்சியில்.

இந்த மதிப்பீட்டை மெய்ப்பிக்க, அவர்கள் நேற்று முன்தினம் நிறைவேற்றியுள்ள கருப்புச் சட்டம் ஒன்றே போதுமானதாகும். அத்தியாவசிய சர்வீசுகள் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தக் கொடிய சட்டம், இவர்களது ஜனநாயக வேடத்தைப் பூரணமாகக் கலைத்துக்காட்டி யிருக்கிறது.

மக்கள் சபையில், தங்களுக்கு பெரும்பான்மை என்ற மிருக பலம் இருக்கிறது என்ற ஒரே காரணத்தால் மிகக் கேவலமான சர்வாதிகாரிகள் கூட, இந்த இருபதாம் நூற்றுண்டில் வெட்கப்படாமல் கொண்டு வருவதற்குத் துணியாத சட்டம் ஒன்றை டெல்லிப் பெரியவர்கள், வெட்கப்படாமலேயே கொண்டுவந்துவிட்டார்கள்.

தபால்-தந்தி ஊழியர்கள் தங்களின் நியாயமான சில கோரிக்கைகளுக்காக, இரண்டாண்டுகளுக்குமேல் இதர வழிகள் பலமூலமாகவும் போராடிப் பலன் காணுத நிலையில், வேலை நிறுத்தம் என்ற கடைசி ஆயுதத்தை—சட்டபூர்வமான உரிமை என்ற ஆயுதத்தைப் பிரயோகிக்க வேண்டியவர்களானுர்கள்; அறிவித்தார்கள்; தாங்கள் விரும்புகிற வகையான பரிகாரத்தை ஏற்றுக்கொள்ள தபால் ஊழியர்கள் மறுக்கிருர்கள் என்பதால், எதேச்சாதிகாரமாக, எழுந்த மிகப் பலமான—ஆவேசமான கண்டனங்களையும் பொருட்படுத்தாமல், கருப்புச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிருர்கள்.

இந்தச் சட்டத்தின் மூலம் இந்தப் பெரியவர்கள், தங்களின் மனுேபாவம் எதை எதை அத்தியாவசிய 'சர்வீசு' என்று கருதுமோ அந்தத் துறையில் பணியாற்றுகிற அனைவரின் அரசியல் சட்டரீதியான ஜீவாதாரமான வேலை நிறுத்தஉரிமைகளையும் பறித்துக் கொள்கிருர்கள். அதுமட்டுமல்ல; இந்தச்சட்டத்தின் மூலம் தடை செய்யப்பட்ட வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவோருக்கு 6 மாதம்வரை சிறைத் தண்டனை அல்லது ரூ. 200 அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். இந்த வேலைநிறுத்தத்தைத் தூண்டுகிறவர்களுக்கு, ஓராண்டு சிறைத் தண்டனை அல்லது ரூ. 1,000 அல்லது, இரண்டும் விதிக்கப்படலாம். அதுமட்டும் கூட அல்ல; இதன்படி, குற்றம் புரிந்திருப்பதாகச் சந்தேகிக்கப்படும் எவரையும் 'வாரண்ட்' இன்றிக் கைது செய்யவும் போலீசாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கொடிய சட்டத்தை வைத்திருக்கவேண்டும் என்று கருதுகிற ஒரு ஆட்சியாளரின் உள்ளம், ஜனநாயக வழிமுறையில் நம்பிக்கை கொண்டது என்று இனியும் எவரேனும் நம்புவது, பைத்தியக்காரத்தனமானதல்லவா?

இந்தக் கேவலமான சட்டம் மக்கள் சபையில் விவாதிக்கப்பட்டபோது எல்லா எதிர்க்கட்சியினரும், நாட்டு நலனில் அக்கறை கொண்ட சில சுயேச்சையாளருமகூட, இந்தச் சட்டத்தினுல் ஏற்படக்கூடிய கொடிய விளைவுகளை, கடந்தகால அனுபவங்களைச் சுட்டிக்காட்டி எடுத்து விளக்கியும்கூட, அவற்றினை உணருகிற நல்லெண்ணமும், விவேகமும் அற்றவர்களாகிவிட்டிருக்கின்றனர், டெல்லிப் பெரியவர்கள்!

கடந்த திங்கள் 30-ந்தேதியன்று, தபால் ஊழியர் வேலை நிறுத்தம்பற்றிப் பேசியபோது பண்டிதர், 'தொழிலாளரின் மிக முக்கியமான உரிமைகளுள் வேலைநிறுத்த உரிமைதான் தலையாயது; இந்தஉரிமையினுல்தான் உலகெங்கும் தொழிற்சங்கங்கள் வளர்ந்திருக்கின்றன; தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது' என்று கூறினுர். இப்படிக் கூறுவதின்மூலம் தன்னை மிகப் பெரியதொரு நியாயவான் என்று காட்டிக்கொள்ள முயற்சிக்கிருர் என்றே பலரும் அப்போது கருதினர்.

ஆனுல், ஒரு கிழமைக்குள் அதே பண்டிதர்தான், இந்த மிக முக்கியமான வேலைநிறுத்த உரிமையை, 'அத்தியாவசிய சர்வீசு பாதுகாப்பு' என்ற பெயரில்,சர்க்கார் ஊழியர்களிடமிருந்து தட்டிப் பறித்துக் கொள்ள சட்டம் கொண்டு வருகிருர். இந்த வேதனையான விசித்திரத்தை என்னென்று சொல்வது?

அரசியல் சட்டமும், இதர தொழிற்சங்கச் சட்டங்களும் வழங்கியிருக்கிற - பாதுகாப்புத் தரக்கூடிய ஒரே அடிப்படை உரிமையைப் பறித்துக்கொள்வதினுல் ஏற்படக்கூடிய விளைவுகள் கொஞ்சநஞ்சமல்ல! சட்டங்களை மதித்து, மக்களின் உரிமைகளுக்குப் பாதுகாப்புத் தரவேண்டிய மிக உயர் அதிகாரம் படைத்த ஒரு சர்க்காரே—டெல்லி சர்க்காரே இப்படி மக்களின் உரிமைகளுக்கு உலைவைக்கிறது என்றுல், அதை விடக் கேவலமான ஒரு இழிசெயல் வேறென்ன இருக்க முடியும்?

'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினுறு அடி பாயும்; என்பார்கள். டெல்லி சர்க்காரின் இந்த முன்மாதிரியைக் காட்டி மாநில சர்க்கார்கள், தாங்கள் எதை எதை அவசியமான துறைப் பணி என்று கருதுகிருர்களோ அந்தத் துறை பணியாளர்களிடமிருந்து இந்த உரிமையைக் கொள்ளையிடக் கருதுவார்கள். பின், சர்க்கார்களே இப்படி நடந்து கொண்டால், தனிப்பட்ட முதலாளிகளைப் பற்றிக் கூறத் தேவையில்லை. நிலைகள் வளரும்; விபரீதமாகும்.

இவ்வளவு அபாயங்களைக் கொண்ட ஒரு சட்டத்தை டெல்லிப் பெரியவர்கள் செய்திருக்கிருர்கள். இந்த சர்வாதிகாரப் போக்கை நாம் வன்மையாகக் கண்டிக்கிறேம்.

இந்தச் சட்டம் மிக இழிவானதோர் கருப்புச் சட்டம் என்பதை எல்லா மக்களும் உணர வேண்டுகிறேம். இந்தச் சட்டத்தையும் மீறி போர்க்களம் புகும் தபால்—தந்தி ஊழியர்கள் வெற்றிபெற வேண்டுமென வாழ்த்துகிறேம்.

இந்தியாவில் ஜமீன்தாரி ஒழிப்பு

ரூ. 615 கோடி நஷ்ட ஈடாகத் தரப்படுமாம்

இந்தியா முழுவதிலுமாக ஜமீன்தாரி முறையை ஒழிப்பதற்காக நஷ்டஈடு என்ற வகையில் ரூ. 615 கோடிவரை செலவிட வேண்டியிருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறதாம்!

முதல் திட்டத்தின்படி, இதுவரை ரூ. 67 கோடி நஷ்டஈடாகத் தரப்பட்டுவிட்டது என்றும் கூறப்படுகிறது.

உ. பி. மாநிலத்தில் மட்டும் ரூ. 44 கோடிவரை நஷ்டஈடு தரப்பட்டிருக்கிறதாம்!

நேரடி நஷ்டஈடாக ரூ. 379 கோடியும், புனர்வாழ்வு மானியமாக ரூ. 86 கோடியும், வட்டியாக ரூ. 150 கோடியும் தரப்படவேண்டியுள்ளதாம்!

இதுவன்னியில், சர்க்கார் எடுத்துக் கொண்ட மத நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்காக அந்த நிறுவனங்களுக்கு சர்க்கார் வருடந்தோறும் பணம் தரவேண்டியுள்ளது என்றும் கூறப்படுகிறது.

சென்னை, ஆந்திரம், மத்தியப் பிரதேசம், ஒரிசா முதலிய மாநிலங்களில் நஷ்டஈடு ரொக்கமாகத் தரப்படுகிறது என்றும், பீகார், உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் 'பாண்டு'களாக நஷ்டஈடு தரப்படுகிறதென்றும் தெரிகிறது.

அநீதியை இழைக்க

ஆந்திர என்.ஜி.ஓ.-க்கள் மறுப்பு

ஐதராபாத், ஆக. 5—

மாநில அரசாங்க ஊழியர்களின் வேலை நிறுத்தத்தின் போது பயன்படுத்த ஆந்திர அரசாங்கம் கருதுவதை ஆந்திர என். ஜி. ஓ.-க்கள் சங்கம் கண்டித்துள்ளது.

28 தொழிற் சங்கங்களின் தலைவர்களும், செயலாளர்களும் கூடி மத்திய அரசாங்க ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை உடனடியாகக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளனர்.

கூலி உயர்வு கேட்டு வேலை நிறுத்தம்

சகரான்பூர் ஊராட்சி மன்றத்தின் நிர்வாகத்தில் பணியாற்றும் 800 நகர சுத்தித் தொழிலாளர்கள், தங்களுக்கு உடையும், கூலி உயர்வும் வேண்டும் என்று வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

வடக்கு மாநிலத்தில் 3 தொழிற்சாலைகள்

ரூ. 6 கோடி செலவில் உருவாக்கத் திட்டம்

ஷில்லாங், ஆக. 5—

ரூ. 6 கோடி செலவில் ஒரு சிமெண்டு உற்பத்தித் தொழிற்சாலை; ஒரு சூடு (தெர்மல்) நிலையம்; ஒரு கயிற்றுப் பாலம் தொழிற்சாலை ஆகிய மூன்றும் அசாம் மாநிலத்தில் தெற்குக் காசி மலைப் பகுதியில் நிறுவப்படுமாம்.

நாள்தோறும் 200 டன் சிமெண்டு அங்கு உற்பத்தி செய்யப்படுமாம்!

கம்யூனிஸ்டுக் கட்சி செயலாளர் 'டிஸ்மிஸ்'

வார்ஸா, ஆக. 6—

போலிஷ் ஒற்றுமை தொழிலாளர் (கம்யூனிஸ்டு) கட்சியின் வார்சா குழு செயலாளர் காலிஞேவ்ஸ்கி பதவியினின்றும் நீக்கப்பட்டுள்ளரர்; அவர், ஸ்டாலின் ஆதரவாளர் என்று கூறப்படுகிறது.

பாலாற்றுக்குக் கைவிரிப்பு!

சென்னை, ஆக. 6—

ஆற்றிலிருந்து குழாய் மூலம் விவசாயத்திற்குத் தண்ணீர் வசதி அளிக்க சென்னை அரசாங்கம் மேற்கொண்டுள்ள திட்டங்களை பாலாற்றில் அமுல் நடத்த அரசாங்கத்திற்கு எண்ணமில்லையாம்.

அங்கு பூமிக்குக்கீழ் கிணறுகள் வெட்ட வேண்டியிருக்குமாதலால், சில உரிமைகளை இது பாதிக்கக்கூடுமாம்; அதனுல் இந்தத் திட்டத்தை அங்கு அமுல் நடத்த இயலாதென்றும் கூறப்படுகிறது.

ஆற்றுத் தண்ணீர்

குழாய்மூலம் பாசனவசதி

சென்னை, ஆக. 5—

நதியிலிருந்து பாசனத்திற்கு குழாய் மூலம் தண்ணீர் கொண்டுவர 6 திட்டங்களுக்கு சென்னை அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாம். ஆண்டுதோறும் 6 திட்டங்களை மேற்கொள்ளப்படுமாம்.

இந்த ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் அர்ஜுனு ஆற்றில் திட்டத்தை நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

இந்தத் தண்ணீர் வேண்டுவோரிடம் கட்டணம் வசூலிக்கப்படுமாம். 50 முதல் 100 ஏக்கராவுக்கு இப்பாசன வசதியளிக்கப்படுமாம்.

சேதி, கேட்டீரா!

இந்தியாவில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரஷ்யா அளிக்க முன்வந்துள்ள ரூ. 55,60,00,000 கடனில் ரூ. 26½ கோடி கனரக இயந்திரத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்குப் பயன்படுத்தபடுமாம்!

கோர்பா நிலக்கரிச் சுரங்க முன்னேற்றத்திற்கு ரூ. 8 கோடி; நெய்வேலியில் தெர்மல் மின்சார உற்பத்தி இயந்திரங்களை நிறுவுவதற்கு ரூ. 16 கோடி; கண் சண்ணுடி உற்பத்தி செய்யும் தொழிலுக்கு ரூ. 85 இலட்சம்; மெத்தால் இயந்திரத்தைச் சீர் திருத்துவதற்கு ரூ. 1 கோடி—செலவிடுவதென்று இந்திய அரசாங்கம் தற்காலிகமாக முடிவு செய்திருக்கிறதாம்!

பித்தளை இரண்டணு

படிப்படியாக 'வாபஸ்' பெறப்படுமாம்!

புதுடில்லி, ஆக. 6—

பித்தளை இரண்டணு நாணயங்கள் 1949 முதலிலிருந்தே படிப்படியாகத் திரும்பப் பெறப்பட்டு வருகிறதாம்!

இந்த நாணயங்கள் செல்லுபடியாகும் என்றும், அரசாங்க சஜானுக்களிலும், ரிசர்வ் பாங்கியிலும் இதனை மாற்றிக்கொள்ளலாம் என்றும் நிதி அமைச்சர் டி. டி. கே. மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

கடன் கொடுப்பது குறையவில்லையாம்!

ரிசர்வ் பாங்கியின் பரிதாப நிலை

பம்பாய், ஆக. 5—

உணவுத் தானியங்கள் மீது பாங்கிகள் கடன் தருவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று ரிசர்வ் பாங்கி தாக்கீது அனுப்பியிருந்தது.

உணவுத் தானியங்களின் விலை உயர்வைத் தடுத்துக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த முடிவை பாங்கிகள் நிறைவேற்ற தவறியுள்ளனவாம்.

சென்ற ஆண்டு இந்தத் திங்களில் கொடுத்திருந்த கடன் தொகையைவிட இந்த ஆண்டு கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகை அதிகமாக உள்ளது என்று ரிசர்வ் பாங்கி மதிப்பிட்டு கூறியுள்ளது; அதோடு ஒரு புதிய உத்தரவும் பிறப்பித்துள்ளது.

சென்ற ஆண்டில் நெல்லுக்கும் அரிசிக்கும் தரப்பட்ட மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பங்கைத்தான் இந்த ஆண்டில் கடனுகத் தர வேண்டும் என்றும், மற்ற தானியங்கள்மீது 75 சத விகிதம் கடன் தரலாம் என்றும் இந்தப் புதிய உத்தரவு கூறுகிறது.

இதை மீறும் பாங்கிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரிசர்வ் பாங்கி எச்சரித்துள்ளது.

விரும்பியபடிதான் ஒதுக்குவார்களாம்!

நியாயத்தைப் பற்றிக் கவலையில்லையாம்!

புதுடில்லி, ஆக. 5—

பெரிய தொழில், சிறிய தொழில்களுக்கான இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசாங்கத்தின் உள்ளக்கிடக்கை அம்பலமாகியுள்ளது.

நிதி ஒதுக்குவதில் எல்லா மாநிலங்களின் தேவைகளையும் மத்திய அரசு கவனிக்குமாம்!

ஆனுல் எல்லா மாநிலங்களுக்கும் சரிசமமாக நிதி ஒதுக்கப்பட வேண்டிய அவசியமில்லையாம்!

மக்கள் சபையில் அமைச்சர் நந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆக. 31-ல் அந்நிய ஆட்சிக்குச் சீட்டு!

மலேயா சுதந்திர நாடாகிறது

கோலாலம்பூர், ஆக. 7—

மலேயாவுக்கு சுதந்திரம் வழங்கும் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

அந்த ஒப்பந்தத்தின்படி பினுங், மலாக்கா மீதும் தான் கொண்டுள்ள ஆதிக்க உரிமையை பிரிட்டன் கைவிட்டுவிடும்.

ஆக. 31-ந் தேதி முதல் சுதந்திர நாடாக மலேயா பிரிட்டிஷ் சர்க்காருடன் 1948-ல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் அனைத்தும் ரத்தாகிவிடுகிறது.

சேரிகள் ஒழிப்பு

மாநிலங்கள் சமர்ப்பித்துள்ள திட்டங்கள் விவரம்

புதுடில்லி, ஆக. 6—

மாநில சர்க்கார்கள் சமர்ப்பித்துள்ள சேரி ஒழிப்புத் திட்டங்கள் சம்பந்தமான விவரங்களாவன :-

ஆந்திரம் : 7 திட்டங்களுக்கு ரூ. 34,08,285.

பம்பாய் 11 திட்டங்களுக்கு ரூ. 2,06,83,588.

சென்னை : 10 திட்டங்களுக்கு ரூ. 27,42,770.

மைசூர் : 17 திட்டங்களுக்கு ரூ. 20,71,600.

மேற்கு வங்காளம் : 3 திட்டங்களுக்கு ரூ. 7,19,36,055.

கேரளம் : 20 திட்டங்களுக்கு ரூ. 33,60,042.

‘தாழ்த்தப்பட்டோர் என்ற நிலை மாற தி. மு. கழகத்தின் திட்டம் என்ன?

அண்ணா தந்த விளக்கம்

சென்னை-மூலக்கோத்தளத்தில் நடைபெற்ற போதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் பிற்பகுதி இங்கு தரப்படுகிறது :—

“டாக்டர் அம்பேத்கார், லண்டன் சென்று படித்துப் பட்டம் பெற்று, இந்தியா திரும்பி, சமஸ்தானத்தில் உயர் பதவியும் பெற்று, குடியிருக்க வீடு கேட்ட போது அவருக்கு வீடுதர மறுத்தனர்; ஆனால், பிறகு அதே அம்பேத்காருக்கு பார்ப்பனப் பெண்ணைக் கொடுத்து மணம் செய்து வைத்தனர்.

தி. மு. கழகத்தின் திட்டம் இதுதான்!

“இது தனிமனிதனின் வளர்ச்சி. நாளடைவில் சமுதாயத்தின் வளர்ச்சி எல்லாத் துறைகளிலும் ஏற்பட வேண்டும் என்று தி. மு. கழகம் தன்னைப் பக்குவப் படுத்திக்கொண்டு வருவதைப்போல வேறு எந்தக் கட்சியும் பாடுபடவில்லை. இதை மனதில் கொண்டு நீங்கள் கழகத்துடன் ஈடுபாடு அதிகம் கொள்ள வேண்டும்.

“திராவிட முன்னேற்றக் கழகம் வைத்துள்ள திட்டத்தைப் பற்றி தோழர் என். வி. நடராசன் சுருக்கமாகக் கூறினார். ‘ஆதி’ என்ற இரண்டு எழுத்துக்களை அகற்றி திராவிடர்களுடன் இரண்டறக் கலக்கச் செய்வதே தி. மு. கழகத்தின் திட்டம்.

நம்மை நன்கு அறிந்த முதியவர்!

“தேர்தல் நேரத்தில் நான், காஞ்சீபுரத்திற்கு அருகாமையில் உள்ள வேடல் என்ற கிராமத்திற்குச் சென்றிருந்தேன்; அங்கு போய் நான் ‘ஓட்டு’ கேட்ட போது, 60 வயதுள்ள ஒரு முதியவர் என்னைப் பார்த்து, ‘உங்களுக்குப் போடாமல் வேறு யாருக்குப் ‘போடப் போகிறேன்’, என்றார்; அவர் கூறியதைக் கேட்டு ஆச்சரியத்துடன் நான், ‘ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்?’ என்று கேட்டேன்; அதற்கு அந்தப் பெரியவர், ‘எங்கள் சாதிப் பெயரை வைத்து நீங்கள்தானே கட்சி நடத்துகிறீர்கள்?’ என்றார்!

“சேரியில் பிறந்து, சேரியில் வாழ்ந்து கொண்டு உழவுத் தொழில் செய்யும் முதியவரே நம்மைப் பற்றி இவற்றை தெரிந்துக் கொண்டுள்ளார் என்பதை நினைத்து மனதிற்குள் மகிழ்ச்சியடைந்தேன்.

அந்த நாட்களில் நாம் தாங்கிய பெயர்கள்!

“உங்களில் ஒருசிலருக்கு—அதுவும் முதியவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்; ஆனால் பலருக்கு, நாம் தாங்கிவந்த பெயர்களை நினைவுப்படுத்த ஆசைப்படுகிறேன்.

சுயமரியாதை இயக்கத்தின் போது, நம்மைப் ‘பறையர்’ கட்சி என்று கேலிக்காகக் கூறினார்கள். நீதிக்கட்சியின்போது நம்மை ஒருசிலர் ‘பறையர்’ கட்சி யென்றும், ஒருசிலர் ‘ துலுக்கர்’ கட்சி என்றும் தூற்றிவந்தார்கள். பிறகு திராவிடர் கழக காலத்தில் ‘பள்ளி’க் கட்சி என்று சொன்னார்கள். இப்படித் தொடர்ந்து அந்தக் காலம் முதல் பெயர்பெற்றுள்ள கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

“இதன் பொருள் என்ன? இதைத்தான் நான் சட்டசபையில் சுட்டிக்காட்டினேன்—‘சமுதாயத்தில் ஆதித் திராவிடர்கள் என்றிருப்பது இதுவே கடைசி தலைமுறையாக இருக்கவேண்டும்; அடுத்த தலைமுறையில் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கக்கூடாது; அதற்காக எல்லாக் கட்சிகளும் இதை தேசியப் பிரச்சினையாகக் கொள்ள வேண்டும்’ என்று கூறினேன்.

ஏமாற்றமடைந்தது யாரால்—எவரால்?

“அமைச்சர் கக்கனை தனியே கூடக் கேட்டேன்—‘பொதுத் தொகுதியிலே எத்தனை தாழ்த்தப்பட்டவர்கள் வெற்றிபெற்றனர்;—என்று! “இருவர் இருக்கலாம்’ என்று கூறினார்.

“தாழ்த்தப்பட்டவர்கள் தனித் தொகுதியில்தான் சட்டசபைக்கு வரமுடிகிறது. இந்தத் தனித் தொகுதி டாக்டர் அம்பேத்கார் வாங்கித்தந்த பிச்சை என்பதை நினைவுப்படுத்தி, ‘பொதுத் தொகுதில் எத்தனை தாழ்த்தப்பட்டவர்கள் வரக்கூடும்’ என்று அமைச்சர் கக்கனைக் கேட்டேன்.

“இந்த அளவிற்கு டாக்டர் அம்பேத்கார் தன் சமூகத்தினருக்கு அரிய பணியாற்றி இருந்தும்கூட, தாழ்த்தபபட்ட மக்கள் காங்கிரசை நம்பித்தான் ஏமாற்றமடைந்தனர்!”

புதுக்கோட்டையில் என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

குமரவேல் நினைவு மன்ற 3-வது ஆண்டு விழா கூட்டத்தில் கலந்து கொள்ள 14—7—57-ல் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் புதுக்கோட்டைக்கு வந்தார்.

காலை 8 மணிக்கு இரயிலடியில், திருக்கோகர்ணம் குமரவேல் நினைவு மன்றத்தினர், நமனசமுத்திரம் தி. மு. க. கிளையின் சார்பிலும், மற்றும் கழக நிர்வாகிகளும் துணைப் பொதுச்செயலாளருக்கு மலர்மாலைகளை அணிவித்து வரவேற்றனர்.

நமனசமுத்திரம் :

அன்று பிற்பகல் நமனசமுத்திரம் தி. மு. கழகக் கூட்டம் கழக அலுவலகத்திற்கு அருகில் அமைந்திருந்த பந்தலில் நடைபெற்றது. தோழர் பொன்னுசாமி தலைமை வகித்தார்.

தோழர் என். வி. நடராசன் ‘தி. மு. கழகமும் தொழிலாளர் பிரச்சினையும்’ என்பது பற்றிப் பேசினார்; கழகச் சார்பில் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டதுடன், பல கிளைகளின் சார்பிலும் கைத்தறி துண்டுகள் அணிவிக்கப்பட்டன. இக்கூட்டத்திற்கு ஏராளமான தொழிலாளர்களும் வந்திருந்தனர்.

குமரவேல் நினைவு மன்றத்தில் :

மாலை 5 மணிக்கு திருக்கோகர்ணம் குமரவேல் நினைவு மன்றத்தில் துணைப் பொதுச்செயலாளருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. மன்றத்தின் 3-வது ஆண்டு நினைவாகச் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. தோழர் என். வி. நடராசன் கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

ஆண்டு விழா பொதுக்கூட்டம்

அன்று மாலை 6-30 மணிக்கு திருக்கோகர்ணம் சத்தியமூர்த்தி திடலில் குமரவேல் நினைவு மன்ற 3-வது ஆண்டு விழாப் பொதுக் கூட்டம் தோழர் கோ. சீனுவாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஏராளமான பொதுமக்களும், ஆலைத் தொழிலாளர்களும் வந்திருந்தனர். புதுக்கோட்டை நகர தி. மு. கழகம் உள்ளிட்ட பல கிளைகளாலும், தொழிற்சங்கத் தோழர்களாலும் தோழர் என். வி. நடராசன் அவர்களுக்கு மலர் மாலைகள், கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

பின்னர் தோழர் த. பா. செழியன் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்.

இறுதியாக தோழர் என். வி. நடராசன் அவர்கள் தற்கால அரசியல் நிலையையும், கழக வளர்ச்சியையும். சட்டசபையில் தி.மு.க.ஆற்றிவரும் பணியினையும் விளக்கிப் பேசினார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் எதிர்காலம்

என்.வி.நடராசன், ஏ.கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து விளக்கம்

டாக்டர் அம்பேத்கார் மன்றம்—கே. வி. கே. சாமி படிப்பக பொதுக்கூட்ட நிகழ்ச்சிகள்

4-8-57 மாலை 6-30 மணிக்கு, சென்னை.மூலக்கோத்தளம் பகுதியில் மேற்படி மன்ற-படிப்பகச் சார்பில் நடைபெற்ற போதுக் கூட்டத்தில் அண்ணா அவர்களும், துணைப் போதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், சட்ட மன்ற உறுப்பினர்களான தோழர் ஏ. கோவிந்தசாமி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியவர்களும், தோழர்கள் ஆ. இரத்தினம், ஆர். ஜார்ஜ், டி. பி. போகேந்திரன் முதலியவர்களும் கலந்துகொண்டு சிறப்புரைகள்வழங்கினர்.

தாழ்த்தப்பட்ட மக்களின் எதிர்கால நலனைக் குறிப்பிட்ட அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்துடன் நெருங்கிய ஈடுபாடு கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தினர்.

கூட்டத்திற்கு திரு. குசேலர் தலைமை வகித்தார்.

தோழர் ஆ. இரத்தினம் அவர்கள் பேசுகையில், ஆதிதிராவிடர்களும் திராவிடர்களும் ஒன்றுபட்டுப் பணியாற்றவேண்டும் என்றும், அதுவே ஆட்சியைக் கைப்பற்றவும், திராவிடத்தைத் தனி நாடாகப் பிரிக்கவும் நல்ல வழியாகும் என்றும் குறிப்பிட்டார்.

ஆதிதிராவிடர்களின் எதிர் காலத்தைப் பற்றியும், அவர்களுக்காக தி. மு. க. வைத்துள்ள திட்டங்களைப் பற்றியும் அண்ணா அவர்களிடமிருந்து அறிந்து கொள்ள தான் விரும்புவதாகக் கூறினார்.

இன்றையக் காங்கிரஸ் ஆட்சி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அணு அளவும் நன்மை செய்யவில்லை என்பதை அவர் விளக்கிவிட்டு மேலும் சொன்னார் :—

“தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற வேண்டுமானால் இந்து மதம் ஒழியவேண்டும்—கடவுள்கள் ஒழியவேண்டும்—சாதி வெறி ஒழிய வேண்டும்—எல்லோரும் இந்து மதத்தைவிட்டு புத்த மதத்தைத் தழுவ வேண்டும். அதோடு, உள்ளத்தில் குடிகொண்டுள்ள மாசு அகற்றப்பட வேண்டும். டாக்டர் அம்பேத்காரைப் பின்பற்றி இன்று 35 இலட்சம் மக்கள் புத்த மதத்தில் சேர்ந்துள்ளனர்.

“இங்கு திராவிட முன்னேற்றக் கழகம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்ல தொண்டு புரிந்து வருகிறது. எதிர்காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் முழு ஆதரவைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றி, மக்களிடையே பிளவுகளும், வேறுபாடுகளும் இல்லாத வகையில் பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.”

★

அடுத்து தோழர் ஆர். ஜார்ஜ் அவர்கள் பேசுகையில், டாக்டர் அம்பேத்கார் அவர்களின் அரிய சேவைகளைப் பாராட்டி, திராவிட முன்னேற்றக் கழகம் இன்று தென்னாட்டு மக்களின் விடுதலை இயக்கமாக மதிக்கப்படுகிறது என்றுகூறி ‘சமுதாயத்தில்உள்ள குறைபாடுகளை கண்டறிந்து நல்ல மருந்து தருவதில் தி. மு. கழகத்தைவிட சிறந்த கட்சி இல்லை’ என்று பாராட்டினார்.

★

அடுத்து, தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், மதமாற்றம் மட்டும் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டாது என்பதை விளக்கினார்.

இதற்கு முன்னர் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்து மதத்தை விட்டு கிருத்துவ மதத்தில் சேர்ந்து பெற்ற பயன் என்ன என்பதை எண்ணிப்பார்க்குமாறு கோரிவிட்டு, மேலும் பேசியதாவது :—

“மத மாற்றத்தால் அனைவரும் சமம் என்றநிலை ஏற்படும் என்றோ, வாழ்வில் விமோசனம் ஏற்படுமென்றோ கருதுவதில் பயன் இல்லை. மதம் மாறுவதால் உள்ள அவலநிலை மாறாது. இதனால் நான் புத்த மதத்தைக் கண்டிப்பதாகக் கருதவேண்டாம்; புத்தர் கூறிய நல்ல கருத்துக்களை நாம் பின்பற்றினால் போதுமானது என்றுதான் கூறவிரும்புகிறேன்.

“காங்கிரஸ் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை செய்வதாகக் கூறுவதெல்லாம் வெறும் கண் துடைப்பு; அவர்கள் அணுகும் முறையும் தவறு! மக்களிடையே உள்ள நம்பிக்கைகளை அகற்ற அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் தான் இத்துறையில் பயன்மிக்க அறிவுப் பிரச்சாரம் செய்து வருகிறது.”

★

அடுத்து, துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில், பொதுத் தொண்டில் ஆர்வம்கொண்ட இளைஞர்கள் அரிய முயற்சிகளை மேற்கொண்டு அம்பேத்கார் பெயராலும், கே. வி. கே. சாமியின் பெயராலும் மன்றங்களை ஏற்படுத்தி நற்பணியாற்றிவருவதைக் கண்டு மகிழ்ச்சியடைவதாகக் கூறினார்; இந்த மன்றங்கள் தி. மு. கழகத்திற்குத் துணையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:

“திராவிடர்களுக்கும் — ஆதித் திராவிடர்களுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி, எனக்கு முன்னால் பேசியவர்கள் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அதைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை என்றே நான் கருதுகிறேன். அதுவும் தி. மு. கழகத்தினர் இதைப் பற்றி விளக்க வேண்டிய நிலை இல்லை!

“நாங்கள் சாதியை மறந்தவர்கள் என்பதை நாடறியும். தாழ்த்தப்பட்ட மக்கள் எங்களுடன் இரண்டறக் கலந்து விட்டார்கள். நகமும்—சதையும் போலவும், உயிரும் உடலும் போலவும், திராவிடர்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் பணியாற்றி வருகின்றனர். இனி நாட்டின் விடுதலைக்காகவும், மக்களின் முன்னேற்றத்திற்காகவும் அரிய சேவை புரிய வேண்டும். அதற்கான நல்ல யோசனைகளைக் கூறுங்கள்; உற்ற துணைவர்களாக இருங்கள்.

“டில்லி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நாம் போராட வேண்டிய பெரிய காரியத்தில் ஈடுபட்டுள்ளோம். இந்த நேரத்தில் சிறு பிரச்சினைகளில் அக்கறை செலுத்தாமல் எல்லோரும் ஒற்றுமையுடன் பணியாற்ற முன் வாருங்கள்.

“‘பாசீச வெறி பிடித்த காங்கிரசை’ ஒழித்துவிட வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கார் முனைந்தார். அவருடைய விருப்பத்தை நிறைவேற்ற தி. மு. கழகம் ஈடுபட்டுள்ளது. எனவே, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் கழகத்தில் பணியாற்ற முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்”

★

அடுத்து சட்ட மன்ற உறுப்பினர் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில், புதிய காசுகள் பொதுமக்களுக்கு விளைவிக்கும் கஷ்டத்தைப் பற்றியும், தரும் தொல்லைகள் பற்றிரும் விளக்குகையில் குறிப்பிட்டதாவது :—

“சென்னை நகரத்தில் அரசாங்கம் நடத்திவரும் பஸ் போக்குவரத்தில்நஷ்டம் ஏற்படுகிறது என்பதற்காக கட்டணம் உயர்த்தப் பட்டுள்ளது. இதுவரை ஒரு அணா கொடுத்த தூரத்திற்கு இப்போது 7 புதிய காசுகள் தரவேண்டியுள்ளது. மக்களிடையே இன்னும் புதிய காசுகள் தேவையான அளவிற்குப் புழக்கத்திற்கு வரவில்லை. இந்த நிலையில் புதிய காசுகள் வேண்டும் என்று பஸ்களில் கட்டாயப்படுத்துவது பலர் நடந்து செல்லவேண்டிய நிலையை ஏற்படுத்திவிட்டது. சிலரிடம் பழைய காசுகள் அதிகமாக வசூலிக்கப்படுகிறது.

“சாதாரணமாக 15 நிமிடங்களில் போகக்கூடிய தூரத்திற்கு இப்போது 25, 30 நிமிடங்கள் ஆகிறது. இது பிரயாணிகளுக்கும் பொதுமக்களுக்கும் தொந்தரவை விளைவிக்கிறது.

“இப்படி பஸ்கள் காலதாமதமாக ஓடுவதால் சாதாரணமாக ஒரு நாளைக்கு எத்தனைமுறை ‘டிரிப்’ ஓடவேண்டுமோ அது குறைந்து விடுகிறது. மக்களுக்கு பஸ் போக்குவரத்துமீது வெறுப்பு ஏற்படுகிறது. இதை முதலமைச்சர் காமராசர் உடனடியாகக் கவனித்து ஆவன செய்யவேண்டுகிறேன்.”

★

அடுத்து தோழர் போகேந்திரன் அவர்கள் பேசுகையில், தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்குக் காரணம், அவர்கள் இரண்டாவது உலகப் போர்மூண்ட நேரத்தில் இராணுவத்தில் சேர்ந்ததேயாகும் என்ற அறிக்கையைப் படித்துக்காட்டி, தாழ்த்தப்பட்ட மக்களின் எதிர்கால வாழ்வு சிறப்பாக அமைய தி. மு. கழகத்துடன் நெருங்கிய ஈடுபாடு கொள்ளவேண்டும் என்று கூறினார்.

பேச்சாளர்களுக்கு கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

தலைவர் முடிவுரைக்குப் பின்னர் செயலாளர் நன்றி நவில கூட்டம் இரவு 9-30 மணிக்கு முடிந்தது.

களங்காணி தி. மு. க. துவக்க விழா

என். வி. நடராசன் கலந்துகொண்டார்

சேலம் மாவட்டம் களங்காணி தி. மு. கழகத் துவக்க விழா 15—7—57 அன்று சிறப்புற நடந்தேறியது. ஊராண்மைக் கழக உறுப்பினர் கே. எஸ். ஆனந்தம் அவர்கள் தலைமை வகித்தார். செல்லம்பட்டி தி. மு. கழக செயலாளர் இளங்கோ, தோழர் முத்துமாணிக்கம் ஆகியோர் கழக வளர்ச்சி குறித்துப் பேசினர்.

தோழர் சிற்றுளி-சுப்பிரமணியம் அவர்கள் கழகம் சாதித்துள்ளவைகளை விவரித்தார்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் மும்முனைப் போராட்டத்தின் விவரங்களையும், கழகம் இன்று அடைந்துள்ள உயர்வையும், எதிர்காலத்தில் ஆற்ற இருக்கும் பணியினையும் விளக்கிவிட்டு, கிளைக் கழகத்தைத் துவக்கி வைத்தார்.

தென்னாட்டின் தேவையை பூர்த்தி செய்யவாம்!

வடநாட்டிலிருந்து ஒரு இலட்சம் டன் சர்க்கரை வருகிறதாம்!

புதுடில்லி, ஆக. 7—

தென்னாட்டின் மாநிலங்களான சென்னை, ஆந்திரா, மைசூர், கேரளம் ஆகிய மாநிலங்களின் தேவையைப் பூர்த்தி செய்ய பீகார், உத்தரப் பிரதேச மாநிலங்களிலிருந்து 1 இலட்சம் டன் சர்க்கரை அனுப்பப்படுகிறதாம்! கரும்பு சாகுபடி அதிகமாக இருந்தும், சர்க்கரை ஆலைகள் துவக்குவதற்கு அரசாங்கம் முன்னெச்சரிக்கையாக இல்லாததே இப்போது விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதற்குக் காரணமாகும். சமீபத்தில் தான் சென்னை அரசாங்கம் 6 சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதியளித்துள்ளது.

சென்னை செயல்படுமா?

புதுடில்லி, ஆக. 6—

கோளத்தில் வீணாக்கப்படும் ஆற்றுத் தண்ணீரை சென்னை பயன்படுத்திக்கொள்ள அனுமதிப்பதுபற்றி தனது செல்வாக்கை உபயோகித்து கேரளத்தின் சம்மதத்தைப் பெற மத்திய அரசாங்க பாசன-மின்சார இலாகா அமைச்சர் தயாராக இருப்பதாக மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

இதனால், சென்னை மாநிலத்திலுள்ள பாலாற்றுக்குத் தண்ணீர் கொண்டுவரவும், பெரியாற்று திட்டத்தைநிறைவேற்றவும் சென்னை அரசாங்கம் மீண்டும் முயற்சி செய்ய நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

டாடா நிறுவனத்தின் இலாபம்

காங்கிரசிற்குப் பங்கு கிடைக்கிறது

புதுடில்லி, ஆக. 7—

தனியார் துறையில் வடநாட்டில் இயங்கிவரும் டாடா இரும்புத் தொழிற்சாலைக்கு சென்ற ஆண்டில் ரூ. 5½ கோடி இலாபம் கிடைத்துள்ளதாம்.

இந்நிறுவனத்திற்கு உலக பாங்கி ரூ. 36 கோடி கடன் உதவியளித்துள்ளதாம்.

இதைத் தவிர, அமெரிக்காவில் உள்ள தனியார்துறை முதலாளியிடம் ரூ. 17 கோடி கடன் பெற கலந்து பேசி வருகிறார்களாம்.

வடநாட்டில் வெளியிடப்படும் 'இந்துஸ்தான் டைம்ஸ்' இதை வெளியிட்டுள்ளதாம்.

1956 எப்ரல் முதல் 1957 மார்ச் திங்கள் வரை ஓராண்டு காலத்தில் காங்கிரஸ் கட்சிக்கு இந்த டாடா நிறுவனம் ரூ. 10 இலட்சம் நன்கொடை அளித்துள்ளது என்று வட நாட்டு ஏடான 'ஸ்டேட்ஸ்மென்' வெளியிட்டுள்ளதாகத் தெரிவருகிறது.

1,000 கைதிகளுக்கு விடுதலை

கோவை, ஆக. 7—

கோவை மத்திய சிறையில் உள்ள 2,400 கைதிகளில் சுமார் 1,000 பேர் சுதந்திர போராட்ட விழாவின்போது விடுதலை செய்யப்படுவார்களாம்.

மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவர்களும் விடுதலை செய்யப்படுவார்களாம்.

உதயசூரியன் அறிவியக்க மன்றப் பொதுக்கூட்டம்

8—8—57 மாலை 6-மணிக்கு சென்னை—வண்ணை இராபின்சன் பூங்கா திடலில் தோழர் ஏம். கோவிந்தராசுலு தலைமையில் மேற்படி பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் கண்ணதாசன், காஞ்சி-கல்யாணசுந்தரம், என். சீவரத்தினம், எஸ். எஸ். தென்னரசு, வழக்கறிஞர் வி.பி. இராமன், மாணவர் சற்குணம், பி. எம். லிங்கேசன், முதலியோர் பேசுவர்.

மதுரையில் அண்ணா

11—8—57 காலை 10மணிக்கு மதுரை பழனி டாக்கீசில் வழக்கறிஞர் பார்த்தசாரதி அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் சிறப்புக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு, '1967' என்னும் பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றுவார்.

தோழர் நாகூர்-அனீபா அவர்கள் இன்னிசை வழங்குவார்.

அன்று மாலை 7-மணிக்கு, திலகர் திடலில் டாக்டர் அருணசலம் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்; அண்ணா அவர்களும், தோழர் எஸ். முத்து அவர்களும் பேசுவர்.

முகவரி மாற்றம்

'மன்றம்' அலுவலகமும் எனது குடியிருப்பும் கீழ்க்கண்ட முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளன. என்னோடும், 'மன்றம்' அலுவலகத்தோடும் தொடர்பு கொள்பவர்கள் இனி புதிய முகவரிக்கே தொடர்பு கொள்ளவும்.

இரா. நெடுஞ்செழியன்

புதிய முகவரி:—
'மன்றம்' 93, பிராட்வே, சென்னை-1

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப் பயணம்

9—8—57: மாலை 3 மணி: கீழ்த் திருப்பாலக்குடி; மாலை 6மணி: கதிராமங்கலம்; இரவு 9 மணி: திருநாகேசுவரம்.

10—8—57: மாலை 4 மணி: தெற்குப் பொய்கைநல்லூர்: மாலை 6 மணி: நாகப்பட்டினம்

11—8—57: காலை—குடந்தை: மாலை—தாராசுரம்.

12—8—57: மாலை—காட்டுமன்னார்குடி.

கழகக் கூட்டம்

பனமரத்துப்பட்டி:
அழகிரி திடலில்
10—8—57 மாலை 6½ மணிக்கு
தலைவர்: ஆர். விசுவநாதன்
பேசுவோர்:
ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
சிற்றுளி-சுப்பிரமணியம்

நல்லமங்கலம் நெசவாளர் முன்னேற்ற சங்கக்கூட்டம்

10—8—57 இரவு 7-மணிக்கு, இராமநாதபுரம் மாவட்டம் நல்லமங்கலம்கைத்தறிநெசவாளர் முன்னேற்ற சங்க ஆதரவில், அழகிரி கலாமன்றத்தில் திரு. மலைக்கனி தலைமையில் மேற்படிக் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் நெல்லை கே. ஆர். பி. மணிமொழியன், இரத்தினம் மற்றும் பலர் பேசுவர்.

சிறப்புக் கூட்டம் ஒத்திவைப்பு

கடலூர், ஆக. 7—

கடலூரில் அண்ணா அவர்கள் பேசுவதற்காக10—8—57-ல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த என். சீவரத்தினம் தேர்தல் வழக்கு நிதி சிறப்புக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

சென்னை-41-வது வட்ட தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு:

9—8—57 மாலை 6-30 மணியளவில், 41-வதுவட்ட கழகப் பணிமனையில் மேற்படி வட்ட தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

ஆரணி தி. மு. க. உறுப்பினர்கட்கு:

10—8—57 சனி பிற்பகல் 2-மணிக்கு, கழகப் பணிமனையில் ஆரணி தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

அச்சக ஊழியர்கள் முன்னெச்சரிக்கை

கோரிக்கைகளை வற்புறுத்த வேலை நிறுத்தம் செய்வர்

கல்கத்தா, ஆக. 6—

ஊதிய அளவை மாற்றியமைப்பது, விடுமுறை கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது, ஓய்வு கால ஊழிய நன்மைகளை ஏற்படுத்துவது போன்ற கோரிக்கைகளை வற்புறுத்தும் பொருட்டு வேலை நிறுத்தம் செய்யப்போவதாக இந்திய அரசாங்க அச்சக ஊழியர்கள் சங்கம் நிர்வாகத்தினருக்கு முன்னெச்சரிக்கை நோட்டீசு விடுத்திருக்கிறது.

ஆக. 19-ந் தேதியன்று தொடங்கவிருக்கும் இந்த வேலை நிறுத்தத்தில் சுமார் 2,000 ஊழியர்கள் கலந்துகொள்வர்.

* * *

சிம்லா, ஆக. 7—

ஊதியக் குழு நியமிக்கப்பட வேண்டும், பஞ்சப்படி அதிகரிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி, இங்குள்ள மத்திய அரசாங்க அச்சக ஊழியர்கள் சுமார் 500 பேர் 14-நாள் அவகாசம் அளித்து 'முன்னறிவிப்பு' அனுப்பியுள்ளனராம். ஜூலை 20-ந் தேதி முதல் வேலைநிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளனர்.

முன்னேற்றத்தைத் தடை செய்து விடுகிறார்களாம்!

பண்டித நேருவின் வருத்தம்

புதுடில்லி, ஆக. 5—

'கிளர்ச்சி செய்வதின் மூலம் இந்தி முன்னேறாது.

'மக்களிடையே வெறுப்புணர்ச்சியை உண்டாக்கி இந்தியை முன்னேறச் செய்ய முடியாது.

சலந்தரில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டோர் மாநாட்டிற்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் இந்தியப் பிரதமர் பண்டித நேரு இவ்வாறு கூறியுள்ளார்.

நில வரியில் விதிவிலக்கு

சிறு பட்டாதாரர்களுக்குக் கிடையாதென முடிவு

சென்னை, ஆக. 7—

நில வரி, குடிவார சீர்திருத்தங்கள் பற்றி சென்னை அமைச்சரவை ஆராய்ந்துள்ளது.

சிறு பட்டாதாரர்களுக்கு நில வரியிலிருந்து விதிவிலக்கு அளிப்பதற்கு அவசியம் இல்லை என்று முடிவு செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

தமிழ்நாடு என்.ஜி. ஓ.-க்கள்

நிதி அமைச்சரிடம் கோரிக்கை

சென்னை, ஆக. 7—

தமிழ்நாடு என். ஜி. ஓ.-க்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் சென்னை நிதி அமைச்சரைச சந்தித்து, ஊதிய விசாரணைக் குழுவை ஏற்படுத்துமாறு மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தவேண்டும் என்றும், மத்திய அரசு மறுத்தால் மாநில அரசாங்கமே அக்குழுவை ஏற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

நிதி அமைச்சர் ஆவன செய்ய இசைந்துள்ளார்.

கட்டளை, புள்ளம்பாடி கால்வாய்த் திட்டங்கள்

சென்னை, ஆக. 7—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கட்டளைக் கால்வாய், புள்ளம்பாடி கால்வாய் திட்டங்களின் வேலையை 17—8—57-ல், முதலமைச்சர் காமராசர் ஆரம்பித்து வைப்பார்.

கட்டளைக் கால்வாய் திட்டத்திற்கு ரூ. 156 இலட்சம் செலவிடப்படும்; இதனால் திருச்சி, தஞ்சை தாலுகாக்களில் 32,622 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

புள்ளம்பாடி கால்வாய் திட்டத்திற்கு ரூ. 142·43 இலட்சம் செலவிடப்படும்; இதனால் திருச்சி மாவட்டத்தில், 22,114 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்குமாம்.

புற்று நோய்க்குப் புதிய சிகிச்சை!

சென்னை—அடையாறு மருத்துவ விடுதியில் புதிய சாதனம்

சென்னை, ஆக. 7—

புற்று நோய் சிகிச்சைக்கு அணு சக்தியையும், கதிரியக்கப் பொருள்களையும் பயன்படுத்தி ஒரு புதிய நவீன சாதனம் சென்னை அடையாற்றில் உள்ள புற்றுநோய் மருத்துவ விடுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

இது 1952-ல்முதலில் சிகாகோவில் அமைக்கப்பட்டு, பிறகு பல ஐரோப்பிய நாடுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு கோபால்ட் சிகிச்சை சாதனம் என்று பெயர்.

மதுவிலக்குச் சட்டம்

மேலும் கடுமையாக்க முடிவு?

சென்னை, ஆக. 7—

சென்னையில் மதுவிலக்குச் சட்டத்தை மேலும் திறமையாக அமுலாக்கவும், சில விதிகளைக் கடுமையாக்கவும் சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

தற்போதைய சட்டத்திற்குசில அவசியமான திருத்தங்கள் செய்வதற்கான மசோதா பற்றி அமைச்சரவை பரிசீலனை செய்திருக்கிறது.

அடுத்து கூடும்சட்டசபைக்கூட்டத்தில் மசோதா விவாதத்திற்கு வரும்.

கட்டாயக்கொள்முதல் செய்ய உத்தரவு

சென்னை, ஆக. 7—

நொய் உள்பட, நெல், அரிசி ஆகியவைகளை அரசாங்கம் கட்டாயக் கொள்முதல் செய்ய முன்வந்துள்ளது. இதற்கான உத்திரவு இன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உத்திரவு செப்டம்பர் 6-ந் தேதிவரை அமுலில் இருக்கும்.

மின்சார ஊழியர்களுக்குப் 'படி' உயர்வு

சென்னை, ஆக. 7—

சென்னை மின்சார இலாகாவில் பணியாற்றும் கடைசித் தர ஊழியர்களுக்கு, நாள் ஒன்றுக்கு 12 அணா படிச் செலவு தரப்படுகிறது; இதை ரூ. 1 ஆக மின்சார நிறுவனம் உயர்த்தியுள்ளது. இதனால் மின்சார நிறுவனத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் அதிகமாக செலவு ஏற்படுகிறதாம்.

அடிப்படை ஊதிய உயர்வு அளிப்பது அவசியம் இல்லையாம்; ஏற்கனவே கிராக்கிப்படி உயர்வு தரப்பட்டுள்ளதே போதுமானதாம்!

அரியலூர் விபத்து

விசாரணைக் குழு அறிக்கைபற்றி மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, ஆக. 7—

அரியலூரில் நடைபெற்ற விபத்தை விசாரிக்க நியமனம் செய்யப்பட்ட குழுவினர் தந்த அறிக்கை இன்னும் ஆராயப்படுகிறதாம்.

'அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அதிகாரிகள்மீது எந்த வித நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை' என்று மக்கள்சபையில இரயில்வே உதவி அமைச்சர் ஷா நவாஸ் தெரிவித்துள்ளார்.

ஜூலை 29-ந் தேதிவரையில் ரூ. 9,34,940·47 நஷ்டஈடாக வழங்கப்பட்டுள்ளதாம்.

சென்னைக்குக்கிடைத்தது ரூ. 33 இலட்சம்!

டில்லி, ஆக. 7—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஸ்தல நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 4 கோடி தொகையை மக்கள் தொகை அடிப்படையில் பகிர்ந்து கணக்கிட்டு, சென்னை மாநிலத்திற்கு ரூ. 33 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளனராம்.

முக்கிய அறிவிப்பு

தபால்—தந்தி ஊழியர்களின் வேலைநிறுத்தம் ஆகஸ்டு 9-ந் தேதியிலிருந்து தொடர்ந்து நடைபெறும் நிலையேற்பட்டு, அதனால் 'நம் நாடு' இதழ் அஞ்சல் மூலம் அனுப்ப இயலாத நெருக்கடி நிலை ஏற்படுமேயானால் நெருக்கடி தீர்ந்ததற்கு பிறகு மொத்தமாக அனுப்பி வைக்கப்படும்.

அஞ்சல் மூலம் இதழ்களைப் பெறும் ஏஜெண்டுகள் அப்படி நெருக்கடி நாட்களில் புகைவண்டி மூலம் பெறுவதற்கு வாய்ப்பு உண்டென்றால் அதன் விவரத்தை உடனே தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இந்த நெருக்கடி காலத்தில் ஏஜெண்டு தோழர்கள் பட்டியல் தொகையை பாங்கி 'டிராப்ட்' மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிர்வாகி: 'நம் நாடு'

மத்திய அரசின் திண்டாட்டம்

உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதில் குழப்பம்

வாழ்க்கைத்தரம் உயர்ந்து வருகிறது!

விலைவாசிகள் அதிகரித்து வருகின்றன!

'இதை எப்படித் தடுப்பது?' என்று ஆராயும் கட்டத்திலிருந்து விலகி, இந்தியப் பேரரசு, உள்ள நிலைமையை இப்போது மறைமுகமாக ஒப்புக்கொள்ள முன்வந்துள்ளது என்பது தெரியவரும்.

இனி அறுவடை காலத்திற்கு முன்னர், உணவுத் தானியங்களின் விலையை நிர்ணயித்து அறிவிப்பதற்கான திட்டத்தை அரசாங்கம் ஆராய்ந்து வருகிறதாம்!

உழவனுக்கு நன்மை தரும் வகையிலும், பொதுமக்களுக்குப் பயன்படும் வகையிலும் விலையை நிர்ணயித்து உணவுத் தானியங்களைக் கொள்முதல் செய்து, பற்றுக்குறை மாநிலங்களுக்கு உணவுத் தானியங்களை அனுப்புவதற்கான திட்டத்தையும் டில்லி ஆராய்ந்து வருகிறதாம்!

அவசியம் ஏற்பட்டால், கட்டாயக் கொள்முதல் முறையைக் கொண்டு வரவும், பெரிய சாகுபடியாளரிடம் நில வரிக்கு ஈடாகத் தானியங்களையே அரசாங்கம் வசூலிக்கவும் சட்டம் கொண்டு வரலாமா என்றும் ஆராயப்பட்டு வருகிறதாம்!

உரத்திற்கு ஈடாகவும் உணவுத் தானியங்களைக் கேட்கக்கூடுமாம்!

விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவே இந்தக் குழப்பத்தில் மத்திய அரசு, திண்டாண்டி வருகிறது.

உணவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உதவி மானியத் தொகை ரூ. 25 கோடியை செலவிடுவதற்கான திட்டங்கள் பற்றியும் மத்திய அரசு ஆராய்ந்து வருகிறதாம்!

ஆர். எஸ். தங்கப்பழம் மீண்டும் கைது

தூத்துக்குடி, ஆக. 6—

உயர்நீதி மன்ற உத்தரவுப்படி, தூத்துக்குடி வடக்கு போலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணன், தோழர் கே. வி. கே. சாமி கொலை வழக்கு எதிரிகளில் ஒருவரான ஆர். எஸ். தங்கப்பழத்தை இன்று கைது செய்து காவலில் வைத்தார் எனத் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.